**முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி**

நாள். 04.09.2025

Case No.MCOP.100/2024

P.W.1

**திருமதி.சுகுணா**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை : (2 வது எதிர்மனுதாரருக்காக)**

எனக்கு இந்த விபத்து சம்பந்தமாக நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக எனது மகன் வெங்கடேஷ் தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். 09.06.2024 அன்று மதியம் 2.45 மணியளவில் விபத்து நடந்தது. எனது கணவர் கிழமேல் சாலையை தெற்கிலிருந்து வடக்காக கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். தூத்துக்குடி – திருநெல்வேலி செல்லும் பாளையங்கோட்டை ரோட்டில் அதிகப்படியான போக்குவரத்து இருக்கும் பகுதி என்றால் சரிதான். எனது கணவர் சாலையின் இருபுறமும் வாகனங்கள் வருவதை பார்த்து விட்டு சாலையை கடந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது கணவர் வாகனம் வருவதை கவனிக்காமல் கவனக்குறைவாக சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. டிவிஎஸ் வாகனத்தை ஓட்டிய நபருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. உரிமம் இல்லாமல் காப்பீட்டு விதிமுறைகளை மீறி வாகனத்தை ஓட்டியுள்ளதால் அந்த வாகனத்தின் உரிமையாளர் தான் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றாலும், காப்பீட்டு நிறுவனம் கடமைப்பட்டது அல்ல என்றாலும் சரியல்ல. எம்எஸ்வி சால்ட் கம்பெனியில் எனது கணவர் வேலை பார்த்து வந்தார் என்பதற்கும், மாதம் ரூ.20,000/– சம்பாதித்து வந்தார் என்பதற்கும் எந்த ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பற்பல தலைப்புகளின் கீழ் கேட்டுள்ள தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. இந்த தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் தான் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும், 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.09.04 14:19:22 +0530

**<u>மறுவிசாரணை :</u>**

**இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.09.04 14:19:27 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தூத்துக்குடி.**